# 487 பேரூராட்சிகளில் நிதி... முதல் பக்க தொடர்ச்சி

துறைக்கும் மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. பொது வாக ஒரு நிதி ஆண்டு என் பது ஏப்ரல் முதல் மார்ச் வரையாகும். ஏப்ரல் முதல் காலாண்டு என கருதப்ப டும் ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களில் நகர்ப் புற உள்ளாட்சிகளான மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகளில் பெரிய வரி வருவாய் இருக்காது.

தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 479 பேரூராட்சி கள் உள்ளன. இந்த பேரூ ராட்சிகளில் 28 லட்சத்து 71 ஆயிரத்து 871 பேர் குடி யிருப்புகளுக்கு சொத்து வரி செலுத்துகின்றனர். மேலும் 10 லட்சத்து 6 ஆயிரத்து 400 பேர் குடிநீர் கட்டணம் செலுத்துகின்றனர். இதுத விர 13 லட்சத்து 65 ஆயி ரத்து 68 பேர் தொழில் வரி செலுத்துகின்றனர். சட்ட மன்றத் தேர்தலுக்கு பிறகு ஏப்ரல், மே மாதங்களில் பேரூராட்சிகளுக்கு அரசி டம் இருந்து வர வேண்டிய மாநில நிதி பகிர்வு மானி யத் தொகை இதுவரை வரவு வைக்கப்படவில்லை. இந்த நிதியை வைத்து தான் பணியாளர்களின் சம்ப ளம், தெருவிளக்குகளுக்கு மின் கட்டணம், பொது மக்களுக்கு விநியோகிக் கப்படும். குடிநீருக்கு குடி நீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய கட்ட ணம் உள்ளிட்டவற்றிற்கு செலவு செய்யப்படுவது வழக்கம்.

ஒவ்வொரு பேரூராட் சிக்கும் மக்கள் தொகை அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.10 லட்சமும், மக்கள் தொகை அதிமுள்ள பேரூ ராட்சிகளுக்கு அதற்கு அதிகமாகவும் நிதி வரவு வைக்கப்படும். இதன் மூலம் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், கடந்த இரண்டு மாதங்களாக இந்நிதி வரவு வைக்கப்படவில்லை. இத னால் பல பேரூராட்சிகளில் பணியாளர்களுக்கு சம்ப ளப் பணத்தை கூட வழங்க முடியாத நிலை உள்ளது.

குடிநீர் கட்டணம் குடிநீர் வடிகால் வாரி யத்திற்கும், மின்சார கட்ட ணம் மின்வாரியத்திற்கும் செலுத்தப்பட வேண்டிய நிலையில் அவை இரண்டும் அரசுத்துறைகள் என்பதால் அவர்களிடம் பேரூராட்சி நிர்வாகத்தின் சார்பில் கால அவகாசம் கேட்டுள்ளனர். புதிய அரசு பொறுப்பேற்று கிட்டத்தட்ட ஒரு மாதத் திற்கு மேலாகியும் இன்ன மும் நிதி வராத காரணத் தால் தமிழகம் முழுவதும் பேரூராட்சிகளில் அடிப் படை பணிகள் முடங்கிக் கிடக்கிறது. நிதி ஆதாரம் வலுவாக உள்ள சில பேரூ ராட்சிகளில் பணியாளர் களுக்கு சம்பளம் வழங் கியுள்ள நிலையில், நிதி ஆதாரம் குறைந்த பேரூ ராட்சிகளில் பணியாளர் களுக்கு இரண்டு மாதமாக சம்பளம் வழங்க முடியாத நிலை நீடிக்கிறது.

தமிழ்நாட்டில் கடந்த மே 4ம் தேதி சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளி யானது. இதில் யாருக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் திமுகவுடன் கூட்டணி சேர்ந்து வெற்றி பெற்ற காங்கிரஸ், விசிக, இந்திய கம்யூ., மார்க்சிஸ்ட், இந் திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் ஆதர வுடன் கடந்த மாதம் 10ம் தேதி புதிய அரசு பொறுப் பேற்றது. விஜய் முதல்வராக பொறுப்பேற்றார்.

ஏற்கனவே 2 மாதங்கள் தேர்தல் நடத்தை விதிமு றைகளால் கழிந்து விட்ட நிலையில், புதிய அரசு பொறுப்பேற்று கடந்த ஒரு மாதத்திற்கு மேலாகியும், வருகிற 18ம் தேதி தான் சட்டப்பேரவை கூட்டத் தொடர் தொடங்குகிறது. இதை தொடர்ந்து பட்ஜெட் கூட்டத்தொடரும், மானிய கோரிக்கைகள் தாக்கலும் நடைபெறும். எனவே உள் ளாட்சிகளுக்கு எப்போது நிதி பகிர்வு கிடைக்கும். ஒரு மாதம் தாண்டினால் அதுவரை ஊழியர்கள் சம்ப ளம், மின் கட்டணம், குடி நீர் கட்டணத்தை எப்படி சமாளிப்பது, மக்களுக்கு தேவையான அத்யாவசிய தேவைகளை எப்படி நிறை வேற்றுவது என அதிகாரி கள், உள்ளாட்சி நிர்வாகங் கள் திண்டாடி வருகின்றன. நிர்வாகத் திறமையின்மை காரணமாக தமிழக அரசு திணறிவரும் நிலையில் உள்ளாட்சிகளுக்கு நிதி வழங்காமல் இருப்பதால், கிராமங்களும் முடங்கும் சூழ்நிலை ஏற்படும் என்று பொதுமக்களும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

குழந்தைகளின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு எதிராக

# எந்த தொழில்களிலும் பணியமர்த்த கூடாது

■ முதல்வர் விஜய் வேண்டுகோள்

**சென்னை, ஜூன் 12:** குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினத்தை ஒட்டி முதல்வர் விஜய் கூறியிருப்பதாவது:

ஜூன் 12ம் நாள் குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. குழந்தை பருவதில் பல்வேறு குடும்பச் சூழ்நிலைகளால் வேலைக்கு செல்கின்ற குழந்தைகளை, அந்த கொடுமையில் இருந்து விடுவித்து, அவர்களுக்கு இனிமையான குழந்தை பருவத்தினையும், முறையான கல்வியினையும் வழங்கிட வேண்டியது நம் அனைவ ரின் கடமையாகும். ஒவ்வொரு குழந்தைக்கும், சுதந்திரமாக வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை மற்றும் கல்வி உரிமை போன்றவை அவசியமானதாகும். இவற்றை வழங்க மறுப்பது இயற்கை நியதிக்கும், சமூக நீதிக்கும் எதிரானதாகும். குழந் தைகளின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு எதிரான எவ்வகையான தொழில்களிலும் குழந்தைகளை பணியமர்த்தக் கூடாது மற் றும் வளரிளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களில் பணியமர்த்தக் கூடாது.

குழந்தை தொழிலாளர்கள் இல்லாத மாநிலமாக தமிழ் நாட்டை உருவாக்கிடுவோம். குழந்தை தொழிலாளர் முறையைத் தகர்ப்போம். கல்வி அளித்து குழந்தைகளின் வாழ்வை ஒளிரச் செய்வோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பிளஸ் 2 பொதுத்தேர்வு

# மதிப்பெண் மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க காலஅவகாசம்

**சென்னை, ஜூன் 12:** மூன்று பாடங்களுக்கான விடைத்தாள் நகல்களை இன்று முதல் பதிவிறக் கம் செய்யலாம் எனவும் பிளஸ் 2 பொதுத் தேர்வு மதிப்பெண் மறுமதிப்பீட் டிற்கு விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிக்கப்பட் டுள்ளது எனவும் அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறி வித்துள்ளது.

மறுகூட்டல், மறுமதிப் பீட்டிற்கு விண்ணப்பிக்க கால அவகாசம் 17.6.2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என அரசுத் தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள் ளது. மேலும், விடைத் தாள் நகல் பதிவிறக்கம் மற்றும் மறுகூட்டல், மறு மதிப்பீட்டிற்கு விண்ணப் பிப்பது தொடர்பான சந் தேகங்களுக்கு 9498383075, 9498383076 என்ற கைப் பேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை ரிப்பன் மாளிகையை 800க்கும் மேற்பட்ட

# மருத்துவ பணியாளர்கள் முற்றுகையிட்டதால் பரபரப்பு

## புதிய வருகைப்பதிவு செயலி முறையால் சம்பளம் பறிபோனதாக கண்ணீர்

**சென்னை, ஜூன் 12:** சென்னை ரிப்பன் மாளி கையை 800க்கும் மேற் பட்ட மருத்துவப் பணி யாளர்கள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்திய தால் பரபரப்பு ஏற்பட் டது. புதிய வருகைப்ப திவு செயலி முறையால் சம்பளம் பறிபோனதாகக் கண்ணீர் விட்டு கதறினர். தொடர்ந்து, ஆணையர் நடத்திய பேச்சுவார்த் தையை தொடர்ந்து போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.



▶ சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் செவிலியர்கள் நேற்று திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் பெருங்குடி சுகாதார மையத்திற்கு சிகிச்சை பெற வந்த நோயாளிகள் திரும்பிச் சென்றுவிட்டனர். இதனால் இருக்கைகள் அனைத்தும் காலியாக உள்ளன.

சென்னை மாநக ராட்சியின் கீழ் செயல் பட்டு வரும் சுகாதார மையங்களில் தற்காலிக மற்றும் ஒப்பந்த முறை யில் பணியாற்றி வரும் நூற் றுக்கணக்கான மருத்துவப் பணியாளர்கள் வருகை பதிவேட்டில் கையெழுத் திட்ட நிலையில், அதன் அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட்டது. டிஜிட் டல் முறையிலான புதிய செயலி முறையில் வரு கைப் பதிவு நடைமுறை வரும் ஜூன் மாதத்தி லிருந்து தான் முழுமை யாகச் செயல்பாட்டிற்கு வரும் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப் பட்டு இருந்தது. ஆனால் மே மாதத்திலேயே இந்த புதிய செயலி நடைமு றைப்படுத்தப்பட்டதால், தொழில்நுட்பக் கோளா றுகள் மற்றும் போதிய விழிப்புணர்வு இல்லாமை காரணமாகப் பலருடைய வருகைப்பதிவு விடுபட் டுள்ளது.

இந்நிலையில், புதிய செயலி முறையில் வரு கைப் பதிவு கணக்கிடப் பட்டு மே மாதத்திற்கான ஊதியம் வழங்கப்பட்ட தால் பலருக்கு ஊதிய இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால், ஆத்திரமடைந்த ஒப்பந்த அடிப்படையி லான 800க்கும் மேற்பட்ட செவிலியர்கள், மருத்துவர் கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் சென்னை ரிப்பன் மாளிகை வளா கத்தை முற்றுகையிட்டு நேற்று காலை முதல் அதி ரடியாக காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட தால் பரபரப்பு ஏற்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட செவிலியர்கள் நிருபர்களி டம் கூறியதாவது:

மொபைல் ஆப் மூல மான புதிய வருகைப்ப திவு முறையின்படி, பணி நேரத்திற்கு மேல் 15 நிமி டங்கள் தாமதமாகப் பதிவு செய்தாலும், ஒரு நாளின் பாதியளவு சம்பளம் உடன டியாகப் பிடித்தம் செய் யப்படுகிறது. கடந்த ஒரு மாதமாக எங்களுக்குச் சம் பளமே வரவில்லை. ஒரு மாத முழு உழைப்பிற்கு வெறும் ரூ.500, ரூ.3000 மட்டுமே வங்கி கணக்கில் ஏறியுள்ளது. இதை வைத் துக் கொண்டு நாங்கள் எப்படி வாழ்வது?. தேசிய நகர்ப்புற சுகாதார இயக் கம் திட்டத்தின் கீழ் மத்திய அரசு செவிலியர்களுக்கு ரூ.30,000 முதல் 35,000 வரை நிதி ஒதுக்கீடு செய்தாலும், மாநகராட்சி எங்களுக்கு வெறும் ரூ.18,000 முதல் ரூ.19,000 மட்டுமே வழங் குகிறது.

ஊழியர்களின் வாழ் வாதாரத்தைப் பாதிக்கும் வகையிலுள்ள கடுமை யான புதிய வருகைப்ப திவு முறையைக் கைவிட வேண்டும். பிடித்தம் செய்யப்பட்ட சம்பளப் பாக்கியை முழுமையாக வழங்க வேண்டும். பெண் பணியாளர்களுக்குச் சட் டப்பூர்வமாக வழங்கப் பட வேண்டிய மகப்பேறு விடுப்பு உள்ளிட்ட அடிப் படை உரிமைகளை நிறை வேற்றி தர வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

இதை தொடர்ந்து, சென்னை மாநகராட்சி ஆணையர் வந்து பேச்சு வார்த்தை நடத்தினார். அப்போது, பிடிக்கப்பட்ட சம்பளத்தை வழங்கவும், மருத்துவ பணியாளர்க ளின் கோரிக்கைகள் தொடர்பாக பரிசீலிப்ப தாகவும் உறுதி அளித்ததை தொடர்ந்து போராட் டத்தை வாபஸ் பெற்றனர். இதனால், தொடர்ந்து 6மணி நேரம் நடைபெற்ற போராட்டம் முடிவுக்கு வந்தது.

## தெற்கு இரயில்வே

திருச்சிராப்பள்ளி கோட்டம்
பணிகள் கிளை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.TPJ/10 of 2026 தேதி 09.06.2026

கோட்ட இரயில்வே மேலாளர் / பணிகள் கிளை / திருச்சிராப்பள்ளி கோட்டம் , திருச்சிராப்பள்ளி – 1 அவர்கள், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின்படி பின்வரும் பணிகளுக்காக ஆன்லைன் ஒப்பந்தப் புள்ளிகளை வரவேற்கிறார். முழுமையான விவரங்கள், மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் www.ireps.gov.in–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | ஒப்பந்தப் புள்ளி எண். | பணி பற்றிய விவரம் | பணியின் தோராய மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | பிணை வைப்பு தொகை ரூ. | பணியை முடிப்பதற்கான காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | TPJ-10-2026-01 | NCR இரயில் நிலையத்தில் ஸ்பா லைன் அமைத்தல் தொடர்பாக, கரை உருவாக்குதலில் எர்த் ஒர்க், அகலப்பாதை இருப்புப்பாதை அமைத்தல், பாயின்டுகள் மற்றும் கிராசிங்குகள் | 50.28 | 100600 | 4 மாதங்கள் |
| 2. | TPJ-10-2026-02 | 1) முதுநிலை பிரிவு பொறியாளர் / நிரந்தர வழி / TPJ பிரிவில் இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு இருப்புப்பாதை பராமரிப்பு பணிகள் 2) முதுநிலை பிரிவு பொறியாளர் / நிரந்தர வழி / TPJ பிரிவில் இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு குப்பை கூளங்களை இடமாற்றுதல் 3) TPJ கோட்டம் முழுவதிலுமாக, ஓர் ஆண்டு காலத்திற்கு மிகவும் முக்கியமான நிரந்தர வழி கண்காணிக்கும் அமைப்புகளை (மானிட்டரிங் அமிப்ட்டுகள்) அவ்வார் வசம் அளித்தல் (outsourcing) | 250.72 | 501500 | 24 மாதங்கள் |
| 3. | TPJ-10-2026-03 | ALU பலாஸ்ட் டெப்போ – Sr.DEN / North / TPJ வரம்புக்குட்பட்டதில் இயந்திரத்தால் உடைக்கப்பட்ட டிராக் பலாஸ்ட் சேகரித்து, சப்ளை செய்தல் மற்றும் விடுவித்தல் (training out) | 666.06 | 1332100 | 8 மாதங்கள் |
| 4. | TPJ-10-2026-04 | TRM நிலைய யார்டில் அகலப்பாதை இருப்புப்பாதை, பாயின்டுகள் மற்றும் கிராசிங்குகள் இணைத்தல், டிராக் பலாஸ்ட் சப்ளை செய்து பரப்புதல் | 74.56 | 149100 | 4 மாதங்கள் |
| 5. | TPJ-10-2026-05 | TNM–ல் உள்ள அதிகாரிகள் ஓய்வு இல்லத்திற்கு இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு தூய்மை காத்தல் மற்றும் விருந்தோம்பல் சேவைகளை அளித்தல் | 24.58 | 49200 | 24 மாதங்கள் |
| 6. | TPJ-10-2026-06 | முதுநிலை பிரிவு பொறியாளர் / நிரந்தர வழி / B–TVR ல் பேரளம் – காரைக்கால் பிரிவில் ஓர் ஆண்டு காலத்திற்கு இருப்புப்பாதை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளல் | 129.85 | 259700 | 12 மாதங்கள் |
| 7. | TPJ-10-2026-07 | பின்வருவனவற்றில் அதிகாரிகள் ஓய்வு இல்லத்திற்கு தூய்மை காத்தல் மற்றும் விருந்தோம்பல் சேவைகளை அளித்தல் அதாவது – 1) VM இரயில் நிலையத்தில் இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு 2) PDY இரயில் நிலையத்தில் ஓர் ஆண்டு காலத்திற்கு | 31.87 | 63800 | 24 மாதங்கள் |
| 8. | TPJ-10-2026-08 | MV இரயில் நிலையத்தில் 1 நெ. பயணியர் எஸ்கலேட்டர் மற்றும் 1 நெ. பயணியர் லிப்ட் அமைத்தல் தொடர்பாக, சிவில் பொறியியல் பணிகள் | 303.26 | 606500 | 6 மாதங்கள் |
| 9. | TPJ-10-2026-09 | TNM நிலைய யார்டில் 12 படுக்கைகள் கொண்ட ரன்னிங் அறை கட்டுமானம் செய்தல் | 180.22 | 360500 | 6 மாதங்கள் |
| 10. | TPJ-10-2026-10 | பேரளம் – காரைக்கால் பிரிவில் பக்க வடிகால் உருவாக்கம் மற்றும் கட்டுமானத்தில் பழுதுபார்த்தல் | 84.04 | 168100 | 6 மாதங்கள் |
| 11. | TPJ-10-2026-11 | முதுநிலை பிரிவு பொறியாளர் / நிரந்தர வழி / VM பிரிவில் இரண்டு ஆண்டுகள் காலத்திற்கு – விழுப்புரம் யார்டில் நடைமேடை முனையில் 500 மீட்டருக்கு அப்பால் குப்பைகூளங்களை அகற்றுதல் | 13.36 | 26700 | 24 மாதங்கள் |

**வ.எண். 1 முதல் 11 வரையிலான பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி முடிப்பதற்கான தேதியும் நேரமும் 06.07.2026 மற்றும் 15.00 மணி**

**ஒப்பந்தப்புள்ளியாளர்களுக்குரிய தகவல்**
**பராமரிப்பு காலம் / குறைபாடு பொறுப்புடைமை காலம்**

இந்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் இடம் பெற்றுள்ள பணிகளுக்கு பராமரிப்பு காலம் (குறைபாடு பொறுப்புடைமை காலம்) என்பது பொருந்தும் என்பதை ஒப்பந்தப்புள்ளியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அது பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**வ.எண். மற்றும் பராமரிப்பு காலம் / குறைபாடு பொறுப்புடைமை காலம்: 1 முதல் 10 வரை** – 6 மாதங்கள் அல்லது ஒரு மழைக்காலம் இதில் எது முன்னதோ அதன்படி; **2 மற்றும் 6** – ஆறு மாதங்கள்; **3** – 3 மாதங்கள்; **4** – 2 மாதங்கள்; **5, 7 மற்றும் 11** – இல்லை; **8 மற்றும் 9** – 3 ஆண்டுகள்.

மேற்குறிப்பிட்ட பராமரிப்பு காலம் / குறைபாடு பொறுப்புடைமை காலத்தில் பணிகளுக்குரிய குறைபாடுகளை சரி செய்தல் மற்றும் பராமரித்தல் பணிகளை பொருந்துவதற்கு ஏற்ப, ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின்படி மேற்கொள்ள வேண்டியது ஒப்பந்தக்காரரின் பொறுப்பாகும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

**குறிப்பு :** 1. இதன் பின்னர் , ஏதேனும் மாற்றம் அல்லது தொடர்பாக இணைப்புகள்/திருத்தம் ஏதேனும் வெளியிடப்பட்டுள்ளதா என்று பார்த்து வர வேண்டியது ஒப்பந்தப்புள்ளியாளர்களின் பொறுப்பு ஆகும். அதன்படி, தங்கள் ஒப்பந்தப்புள்ளியை பதிவேற்றம் செய்யும் தருணத்திலும் அவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

2. **ஒப்பந்தப்புள்ளி காப்புறுதி தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு:** கீழ்க்காணும் ஒப்பந்தப் புள்ளியாளர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி காப்புறுதி தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப் படுகிறது. அ) தொழில் துறை ஊக்குவிப்பு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறையால் (DIPP) அங்கீகரிக்கப் பட்ட தொடக்க நிலை நிறுவனங்களுக்கு (ஸ்டார்ட் அப்) ஒப்பந்தப்புள்ளி காப்புறுதி தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு ஆ) தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள், ஒப்பந்தப்புள்ளி காப்புறுதி தொகையில் 50% மட்டுமே செலுத்த வேண்டும். ஒப்பந்தப்புள்ளியாளர்கள், தமது / தங்கள் விலக்களிப்புக்கான உரிய ஒப்பந்தப்புள்ளி காப்புறுதி தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு பெற்றுள்ளதற்கான உரிய ஆவணங்களை இணைக்க வேண்டும். அவ்வாறு இணைக்கப்படாவிட்டால் விலைப்புள்ளி அப்படியே நிராகரிக்கப்படும்.

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். TPJ/09/2026 தேதி 25.05.2026க்கு திருத்தம்**

(i) திருத்தப்பட்ட ஒப்பந்த மதிப்பு மற்றும் பிணை வைப்புத் தொகை:

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி எண். | பணியின் மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | | பிணை வைப்பு தொகை (ரூபாய்) | |
|---|---|---|---|---|---|
| | | ஏற்கனவே உள்ளது | மாற்றி வாசிக்க வேண்டியது | ஏற்கனவே உள்ளது | மாற்றி வாசிக்க வேண்டியது |
| 1 | TPJ-09-2026-03 | 374.33 | 351. 08 | 748700 | 702200 |

மற்ற கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி அப்படியே உள்ளன

கோட்ட இரயில்வே மேலாளர் / பணிகள் / TPJ

# அரசு மருத்துவமனைகளில் முன்பதிவு செய்ய 'பிரத்யேக செயலி' உருவாக்கப்படும்

**சென்னை, ஜூன் 12:** சென்னை தேனாம்பேட்டையில் உள்ள டி.எம்.எஸ்., வளாகத்தில் மருத்துவ கல்லூரி முதல் வர்களுடனான ஆலோ சனை கூட்டம், மக்கள் நல் வாழ்வு துறை அமைச்சர் அருண்ராஜ் தலைமையில் நேற்று நடந்தது. அதனை தொடர்ந்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது:



அமைச்சர் பேட்டி

அரசு மருத்துவமனைகளில் நோயாளிகள் காத்திருக்கும் நேரம் அதிகமாக உள்ளது. இதற்காக, தனியார் வாயி லாக 'பிரத்யேக செயலி' உரு வாக்கப்படும். அதில், ஆதார் பயன்படுத்தி, காலை 8 முதல் 9 மணி வரை முன்பதிவு செய்து கொள்ள முடியும். இவை, அரசு மருத்துவ கல் லூரி மருத்துவமனைகளில் விரை வில் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்படும் என்றார்.

## லாலு பிரசாத்துக்கு மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து

**சென்னை, ஜூன் 12:** திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று தனது சமூக வலை தள பதிவில் கூறியிருப் பதாவது: ராஷ்டிரிய ஜனதா தளக் கட்சியின் தலைவர் லாலு பிரசாத்துக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள். மதச் சார்பின்மை மற்றும் சமூக நீதிக் கொள்கைகளைப் பாதுகாப்பதில் தாங்கள் தொடர்ந்து காட்டும் உறுதி நாடு முழுவதும் உள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகளுக்கு ஊக்கமாக விளங்குகிறது. தாங்கள் நல்ல உடல்நலத்தோடும் மகிழ்ச்சியோடும் திகழ விழைகிறேன். இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

குற்ற வழக்குகளில் தண்டனையை எதிர்த்த

# மேல்முறையீடு நிலுவையில் உள்ளபோது கைதிக்கு பரோல் வழங்க முடியுமா?

## நீதிமன்றத்திற்கு உதவ மூத்த வழக்கறிஞர் அபுடு குமார் நியமனம்

**சென்னை, ஜூன் 12:** குற்ற வழக்குகளில் தண்டிக்கப் பட்டு, மேல் முறையீட்டு வழக்குகள் நிலுவையில் உள்ள போது சம்பந்தப் பட்ட கைதிக்கு பரோல் வழங்குவது தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் இரு வேறு அமர்வுகள் வெவ்வேறு உத்தரவுகளை வழங்கியுள்ளதால், இந்த விவகாரம் குறித்து முடிவெ டுப்பதற்காக, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், ஏ. டி.ஜெக தீஷ் சந்திரா, எம்.நிர்மல்குமார், சுந்தர் மோகன் ஆகிய 5 நீதிபதிகள் அடங்கிய அமர்வு அமைக் கப்பட்டது.



இந்த வழக்கில், மாற்று கருத்து இருக்கிறதா என்று அறிந்து கொள்ளும் வகை யில், நீதிமன்றத்துக்கு உதவியாக வழக்கறிஞர் ஒருவரை நியமிப்பதாக நீதிபதிகள் தெரிவித்து வழக் கின் விசாரணையை ஜூன் 19ம் தேதிக்கு தள்ளிவைத்திருந்தனர். இந்நிலையில், நீதிமன்றத்துக்கு உதவியாக மூத்த வழக்கறிஞர் அபுடு குமார் ராஜரத்தினத்தை 5 நீதிபதிகள் அமர்வு நியமித்து நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஆளுங்கட்சியின் தவறுகளை சுட்டிக்காட்டும்

# பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நிருபர்களுக்கு பேரவை முதல் மாடியில் இருக்கை ஒதுக்க திட்டம்

**சென்னை, ஜூன் 12:** தமிழக சட்டப்பேரவை நிகழ்ச்சிகளை நேரில் பார்த்து செய்தியாக வெளியிட பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நிருபர்களுக்கு தனி இருக்கை ஒதுக்கப்பட்டு இருக்கும். இந்த இருக்கையை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக இருக்கை கமிட்டி குழு ஒன்று அமைக்கப்படுவது வழக்கம். இதில் முன்னணி பத்திரிகை நிருபர்கள் இடம்பெறுவார்கள். அதன்படி, தவெக ஆட்சி பதவி யேற்ற பிறகு 9 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினத்தந்தி, தின மணி, மாலைமுரசு, டெக்கான் கிரானிக்கல், நியூஸ்-18, பாலிமர் என பத்திரிகை மற்றும் தொலைக் காட்சியை சார்ந்தவர்கள் இடம் பெற்றுள்ளனர்.

வழக்கமாக இந்த குழுவை பேரவை செயலாளராக இருப்ப வர்தான் நியமித்து, சபாநாய கர் ஒப்புதல் பெற்று அறிவிக்க வேண்டும். ஆனால், தற்போது இந்த கமிட்டியை பொதுப்ப ணித்துறை அமைச்சராக உள்ள ஆதவ் அர்ஜுனா தான் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. ஏற்கனவே, அமைச்சர் ஆதர் அர்ஜுனா தான் அனைத்து துறையிலும் தலையிட்டு, அவ ருக்கு வேண்டிய நபர்தான் பத வியில் இருக்க வேண்டும், தான் சொல்வது தான் நடக்க வேண் டும் என்று பஞ்சாயத்து செய்து வருவதாக ஒரு குற்றச்சாட்டு உள் ளது. தற்போது, பத்திரிகையாளர் கமிட்டி அமைப்பதிலும் இவர் தான் முழு பங்காற்றி உள்ளார். இவரது அலுவலகத்தில் இருந்து, தன்னுடைய லேப்டாப் மூலமே கமிட்டி அமைத்து சட்டப்பே ரவை பெண் செயலாளருக்கு அனுப்பி ஒப்புதல் வாங்கியுள் ளாராம்.

பேரவை முன்னவராக உள்ள அமைச்சர் செங்கோட்டையன் தலையீடு கூட இதில் இல்லாமல், அவரும் ஓரங்கட்டப்பட்டு உள் ளார். இந்த பத்திரிகையாளர்க ளின் கமிட்டி கூட்டம் இன்று மதியம் 12 மணிக்கு நடைபெறு கிறது. இதில் தலைவர், துணை தலைவர், செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். அதன்படி, தினத்தந்தி நிருபர் தலைவராகவும், தின மணி நிருபர் துணை தலைவராக வும், செயலாளராக இந்து பத்தி ரிகையை சார்ந்தவர்கள் இன்று நடைபெறும் கமிட்டி கூட்டத் தில் தேர்வு செய்யப்பட உள்ள தாக தகவல்கள் வெளியாகி உள் ளது. இதுவும், முழுக்க முழுக்க அமைச்சர் ஆதவ் அர்ஜுனா வின் தலையீட்டின் கீழ் தான் நடக்க உள்ளதாகபேரவை செய லக ஊழியர்கள் தெரிவித்தனர்.




இந்த குழு வினர் தான் பேரவைக்குள் செய்தி சேகரிக்க செல்லும் நிரு பர்களுக்கான இருக்கைகளை ஒதுக்குவார் கள். அதன்படி, ஆளுங்கட்சிக்கு சாதகமாக செய் திகளை பிரசு ரிக்கும் பத்திரி கைகள் மற்றும் தொலைக்காட் சிகளுக்கு தரை தளத்தில் இருக்கை ஒதுக்கப்ப டும். அதேநேரம், ஆளுங்கட்சிக ளின் தவறுகளை சுட்டிக்காட்டும் முக்கியமான சில பத்திரிகை களுக்கு முதல் மாடியில் உள்ள இருக்கை ஒதுக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது. முதல் தளத்தில் இருந்து பேரவை நிகழ்வுகளை முழுவதுமாக பார்க்க முடியாது. அதனால், ஆளுங்கட்சிக்கு எதி ரான பத்திரிகை என்று, அமைச் சர் ஆதவ் அர்ஜுனாவை தீர்மா னித்து மேல் இருக்கைக்கு மாற்ற பேரவை இருக்கை கமிட்டிக்கு உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகி றது. இதுகுறித்து அதிகாரப்பூர்வ தகவல் இன்று நடைபெறும் கூட் டத்தில் எடுக்கவும் முடிவு செய் யப்பட்டுள்ளது.

## சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்காக)

இவ்வாறிருக்க, கீழே கையொப்பமிட்டவர் **சிஎப்எம் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (சிஎப்எம்ஏஆர்சி) (CIN:U67100GJ2015PTC083994)** அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழ்க்குறிப்பிட்டவாறு **26.05.2023 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு ஒன்றை வழங்கி கடன்தாரர்கள் L மோகன் என்கிற மோகன் லோகநாதன், லோகநாதன் M மற்றும் V.முருகேசன் என்கிற முருகேசன் வெள்ளியப்பன் (ஜாமீன்தாரர்), ஆகியோரிடம்** அறிவிப்பில் குறிப்பிட்ட **கடன் கணக்கு எண்.HHLVLC00180515–இன் 12.05.2023 தேதியன்று நிலுவையிலிருந்த ரூ. 31,76,604.85 (ரூபாய் முப்பத்து ஒரு லட்சத்து எழுபத்தாறாயிரத்து அறுநூற்று நான்கு மற்றும் எண்பத்தைந்து பைசா மட்டும்)** தொகையையும் அதற்கான வட்டியையும், அறிவிப்பைப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறியுள்ளார், இதன்மூலம் கடன்தாரருக்கு குறிப்பிட்டு, மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாக வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே கையொப்பமிட்ட அதிகாரப்பூர்வ அதிகாரியானவர் மேற்கூறிய விதிகளின் விதி 8 உடன் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்டச் சொத்தினை **11.06.2026 தேதியன்று** அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரருக்குக் குறிப்பிட்டு, மேலும் பொதுமக்களுக்குப் பொதுவாக, இதன்மூலம் எச்சரிக்கப்படுவதாவது கீழே குறிப்பிடப்பட்ட சொத்துடன் எந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாம். மேலும் சொத்துடனான அனைத்து நடவடிக்கைகளும் 12.05.2023 தேதியின்படி **சிஎப்எம் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெடுக்குச் செலுத்த வேண்டிய (சிஎப்எம்ஏஆர்சி) ரூ. 31,76,604.85 (ரூபாய் முப்பத்து ஒரு லட்சத்து எழுபத்தாறாயிரத்து அறுநூற்று நான்கு மற்றும் எண்பத்தைந்து பைசா மட்டும்)** மற்றும் அதற்கான வட்டிக்கு உட்படும்.

கடனீட்டுச் சொத்துகளை மீட்பதற்கு கால அவகாசம் கிடைக்கப்பெறுதல் குறித்த, சட்டத்தின் பிரிவு 13 இன் உட்–பிரிவு (8) விதிமுறைகள் கடன்தாரர் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன.

**அசையா சொத்தின் விவரம்**

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், பொலிவாக்கம் கிராமம், திருவள்ளூர்–602002, தமிழ்நாடு, சர்வே எண் 527/2, 527/3 பகுதி, க்ரீன் டவுன் என்றழைக்கப்படும் வளாகத்தில் இரு அடுக்குமாடி குடியிருப்பு வீடு உள்ள பகுதியில் அலகு எண்.415 B இல் உள்ள மொத்தம் 2400 ச.அடி பரப்பளவு உள்ள பகுதியில் 1299 ச.அடி கட்டுமானப் பரப்பளவு உள்ள **மனை எண்.415 இன்** (இதில் மனை எண்.415 இன் கீழ் 1200 ச.அடி பிரிக்கப்படாத பங்கு உள்ள நிலத்துக்குரிய உரிமை உள்ளது) **மனை எண்.415 எல்லைகள் பின்வருமாறு:** வடக்கில்: மனை எண். 416, தெற்கில்: மனை எண். 414, மேற்கில்: பூங்கா, கிழக்கில்: 24 அடி சாலை. மனை எண்.415 திருவள்ளூர் பதிவு மாவட்டம், மணவாளநகர் சார் பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.

**தேதி: 11.06.2026**
**இடம்: திருவள்ளூர்**

**அதிகாரப்பூர்வ அதிகாரி**
**சிஎப்எம் அசெட் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்,**
**சிஎப்எம்ஏஆர்சி ட்ரஸ்ட்-I IHFL என்ற பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுவது**

## தெற்கு இரயில்வே

**சென்னை கோட்டம்**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

முதுநிலை கோட்ட சமிக்ஞை மற்றும் தொலைதொடர்பு பொறியாளர் / I / MAS அவர்கள், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் பின்வரும் பணிக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

| மின்னணு ஒப்பந்தப் புள்ளி எண். | பணி பற்றிய விவரம் | தோராய ரொக்க மதிப்பு ரூ. | பணியை முடிப்பதற்–கான காலம் |
|---|---|---|---|
| M-SG-2026-512-TMS_6Stn தேதி 22.05.2026 | சென்னை கோட்டத்தின் பல்வேறு இரயில் நிலையங்களில் ட்ராக் மெஷின் சைடிங் அமைத்தல் தொடர்பாக சிக்னல்லிங் பணி | 2,96,55,744.36/- | 12 மாதங்கள் |
| M-SG-2026-514-TT_ABSS_Stn தேதி 01.06.2026 | அமிர்த் பாரத் நிலையத் திட்டம் சார்ந்த 13 இரயில் நிலையங்களில் பயணச்சீட்டு அளிக்கும் அலுவலகங்களில் இரயில் வண்டி கால அட்டவணை அமைத்தல் தொடர்பாக, பணியின் தொலைதொடர்பு பகுதி வேலை | 62,07,416.50/- | 12 மாதங்கள் |
| M-SG-2026-515-MS_VM-2 தேதி 09.06.2026 | சென்னை கடற்கரை (msb) – விழுப்புரம் (vm) பிரிவில் பொறியியல் பணிகள் தொடர்பாக பணியின் சிக்னல்லிங் மற்றும் தொலைதொடர்பு பகுதி வேலை (msb - vm - 2026 - 2) | 1,45,50,242.18/- | 12 மாதங்கள் |

ஒப்பந்தப்புள்ளி பற்றிய முழு விவரங்களையும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி வலைதளம் **https://www.ireps.gov.in**–லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**முதுநிலை கோட்ட சமிக்ஞை மற்றும் தொலைதொடர்புப் பொறியாளர் / I / MAS**

**pnb Housing Finance Limited** Ghar Ki Baat

**பிற்சேர்க்கை–IV–A அசையாச் சொத்து(கள்) மின்–ஏலம் பொது விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம் 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம்–விற்பனை அறிவிப்பு**

**பதிவு அலுவலகம்:- 9ஆவது தளம், அந்தரிக்ஷ் பவன், 22, கஸ்தூரிபா காந்தி மார்க், புதுடெல்லி-110 001, தொலைபேசிகள்: 011-23357171, 23357172, 23705414, இணையதளம்: www.pnbhousing.com**

**கிளை அலுவலகம் மேற்கு தாம்பரம்: கதவு எண்.41, லயா டவர், 2 ஆவது தளம், பிள்ளையார்கோயில் தெரு, முடிச்சூர் சாலை மேற்கு தாம்பரம், சென்னை–600 045.**

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் நிரல் எண்–A இல் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) & ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கடனீட்டுக் கடனீந்தோரிடம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டுக் கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் ஆக்கப்பூர்வ/கையக சுவாதீனம் (நிரல் எண்–C இல் விவரிக்கப்பட்டவாறு) செய்யப்பட்டிருக்கும் நிரல் எண்–D இல் குறிப்பிட்டுள்ள கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்து(கள்) ஆனது, கீழே குறிப்பிட்ட விவரங்களின்படி "உள்ளது உள்ளவிடத்தில், உள்ளது உள்ளவாறு மேலும் உள்ளது எதுவோ அது அடிப்படையில்" விற்பனை செய்யப்பட உள்ளது.

நாளது தேதியத் திருத்தப்படி கடனீட்டுச் சொத்து உரிமை அமலாக்கம் விதிகள், 2002 இன் விதி 8(6) & 9 கீழ் நிரல் எண்–A இல் குறிப்பிட்டவாறு கடன்தாரர்(கள்)/அடமானதாரர்(கள்)/ சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ அடமானதாரர்(கள்) (இறந்தது முதல்) அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதி, (தெரிந்தது அல்லது தெரியாதது), நிறைவேற்றுநர்(கள்), நிர்வாகி(கள்), வாரிசு(கள்), உரிமையுற்றோர்(கள்) ஆகியோருக்கு இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, M/s. பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின்/கடனீட்டுக் கடனீந்தோரின் இணையதளம் அதாவது www.pnbhousing.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பினைப் படிக்கவும்.

| கடன் எண்/ கடன்தாரர்/ உப-கடன்தாரர்/ ஜாமீன்தாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர் (A) | கோரப்பட்ட தொகை & நாள் (B) | சுவாதீன தன்மை (C) | அடமானச் சொத்துகள் விவரம் (D) | நிர்ணய விலை (RP) (E) | முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையின் (10%) (F) | ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G) | ஏலம் உயர்த்தும் விகிதம் (H) | பார்வையிடும் நாள் & நேரம் (I) | ஏலம் நாள் & நேரம் (J) | தெரிந்த வில்லங்கங்கள்/ நீதிமன்ற வழக்கு ஏதேனுமிருந்தால், (K) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| HOU/RTAMB/0424/1249220, ராம்குமார் B. பீட்டா யாமினி துர்கா, ரோஷிணி கி.அ.: மேற்கு தாம்பரம் | Rs. 50,68,527.08, 14-May-25 | கையக சுவாதீனம் | பிளாட் எண்.F2, முதல் தளம், ராகவேந்திரா நகர் II, ஆரம்பாக்கம் கிராமம், கூடுவாஞ்சேரி, சார் பதிவு அலுவலகம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம், தமிழ்நாடு–603203, இந்தியா | Rs. 48,92,000 | Rs. 4,89,200 | 16/07/2026 | Rs. 10,000 | 25-06-2026, 11AM to 5PM | 17-07-2026, 02Pm to 03PM | அறியப்படாதது |

*பொருந்துமாறு ஆண்டுக்கு 18% விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, அதற்கான பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவு கட்டணங்கள் ஏனையவற்றுடன் சேர்த்து. ** பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரபூர்வ அதிகாரிக்கு நன்கு தெரிந்த மற்றும் அறிந்த வரையில், நிரல் எண்–K இல் அறிவிக்கப்பட்டது தவிர்த்து மேற்குறிப்பிட்ட அசையா/கடனீட்டுச் சொத்துகள் தொடர்பான பிற வில்லங்கங்கள்/ கோருரிமைகள் இல்லை. மேற்கொண்டு இவ்வித வில்லங்கங்கள் ஆனது வெற்றிபெறும் கொள்முதலாளர்/ஏலதாரர் மூலம் அவருடைய தரப்பில் வழங்கப்பட/செலுத்தப்பட வேண்டும். எதிர்நோக்கும் கொள்முதலாளர்(கள்)/ ஏலதாரர்கள் குறிப்பிட்டுள்ள வில்லங்கங்களின் உண்மைத்தன்மையை தனிப்பட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 1. நாளது தேதிப்படி, மேற்கூறிய அசையாச் சொத்துகள்/கடனீட்டுச் சொத்துகளை விற்பனை செய்தல், உரிமை மாற்றுதல் மேலும்/அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ பின்என்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியை தடுக்கும் ஆணை மேலும்/அல்லது நீதிமன்ற தடையுத்தரவு நிரல் எண்– K இல் தெரிவிக்கப்பட்டது போல எதுவுமில்லை. 2. எதிர்நோக்கும் கொள்முதலாளர்/ஏலதாரர் மற்றும் விருப்பமுள்ள நபர்கள் பிஎன்பி ஹவுசிங் பைனானஸ் லிமிடெட் வசமிருக்கும் அதற்கு தொடர்பான உரிமைப்பத்திரத்திரன் ஆவணப் பத்திரம் உட்பட ஆனால் வரம்புக்குட்படாது நிரல் எண்– K இல் தெரிவிக்கப்பட்ட செயல்பாட்டிலுள்ள வழக்குகள்/ வழங்கப்பட்ட ஆணைகள் ஏனையவை ஏதேனுமிருந்தால் அவற்றை தனிப்பட்டு ஆய்வு செய்து கொள்ளலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளி/ஏலப்புள்ளி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முன்பு அல்லது ஒப்பந்தப்புள்ளி(கள்) வழங்கும் முன்பு அனைத்து விதத்திலும் தாமாகவே திருப்தியுற வேண்டும். ஏலதாரர்(கள்) ஏலப்புள்ளிப் படிவத்துடன் இந்த ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் கையொப்பமிட வேண்டும். 3. கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(3) இன்படி, ஏலதாரர்(கள்)/ கொள்முதலாளர் அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மிகாமல் விற்பனை விலையின் 25% தொகையை, (முன்வைப்புத்தொகை ஏதேனும் செலுத்தப்பட்டிருந்தால் அவை உட்பட) செலுத்துவதற்கு சட்டப்பூர்வமாக கட்டுப்பட்டவர். கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 9(2) இன்படி கடனீட்டுக் கடனீந்தோர் மூலம் விற்பனை விலையின் 25% பெற்ற பிறகு மட்டும் ஏலதாரர்(கள்) பெயரில் விற்பனை உறுதிப்படுத்தப்படும். விற்பனை பரிசீலனைத் தொகையின் மீதி 75% ஆனது விற்பனை உறுதிக் கடிதம் ஒப்புகைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொள்முதலாளரால் செலுத்தப்பட வேண்டும் மேலும் இவ்விதம் செலுத்தத் தவறினால், சொத்து/கடனீட்டுச் சொத்து மறுவிற்பனை செய்யப்படும். 4. மனை எண் 68, 3வது தளம், செக்டார் 44, குர்கான், ஹரியானா 122003 என்ற இடத்தில் அதன் கார்பரேட் அலுவலகத்தைக் கொண்டிருக்கும் M/s. சி1 இந்தியா பிரைவேட் லிமிடெட் மின்–ஏலம் மூலம் விற்பனை நடத்துவதில் அதிகாரப்பூர்வ அதிகாரிக்கு உதவும். இணையதளம்: www.bankeauctions.com. சொத்து பார்வையிடுதல் அல்லது ஏலப்புள்ளி ஆவணங்கள் பெறுதல் தொடர்பான அனைத்து உதவிகளுக்கும் மேலும் அனைத்து பிற விசாரணைகளுக்கும் அல்லது பதிவுசெய்வதற்கும், நீங்கள் பிஎன்பிஎச்எப்எல் அதிகாரப்பூர்வ நபர் திரு.ஏங்கெல்ஸ்/ துர்கேஷ்/ ஜோதிகண்ணன்/ ஸ்ரீ சரண் செல்பேசி: 9344007827/ 9042840151/ 9840487424 / 9738931789, கட்டணமில்லா எண்.1800 120 8800, மின்னஞ்சல்: auction@pnbhousing.com அல்லது www.pnbhousing.com காணவும்.

**இடம்: காஞ்சிபுரம் நாள்: 12-06-2026**

**ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**